Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, ஜனவரி 17 2024 | இதழ் 185

# 1000 காளைகள், 600 மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர் அலங்காநல்லூர் ஜல்லிகட்டுப் போட்டியில் காளைகளுடன் மல்லுக்கட்டும் காளையர்கள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்

சென்னை, 17 ஜனவரி 2024: அலங்காநல்லூரில் இன்று நடந்த ஜல்லிக்கட்டு போட்டியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

தைப்பொங்கல் தினத்தையொட்டி மதுரை மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகள் பிரசித்தி பெற்றது. பொங்கல் தினத்தன்று அவனியாபுரத்திலும், நேற்று பாலமேட்டிலும் ஜல்லிக்கட்டு நடைபெற்றன.

உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா இன்று காலை 7 மணிக்கு காளியம்மன் கோவில் முன்பாக உள்ள வாடிவாசல் திடலில் அரசு வழிகாட்டுதல்படி தொடங்கியது. மாவட்ட கலெக்டர் சங்கீதா தலைமையில் மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள், விழா குழுவினர் ஆகியோர் ஜல்லிக்கட்டு பாதுகாப்பு உறுதிமொழி எடுத்து கொண்டனர். தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பச்சை கொடியசைத்து போட்டியை தொடங்கி வைத்தார்.

வனிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மீன்வளம் மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆட்சியர் மோனிகா ராணா, எம்.எல்.ஏக்கள் வெங்கடேசன், பூமிநாதன், தளபதி, தமிழரசி மற்றும் அரசு துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

காலை 7 மணிக்கு தொடங்கிய இந்த ஜல்லிக்கட்டு போட்டியானது மாலை 5 மணி வரை 10 சுற்றுகளாக நடக்கிறது. காளைகளுக்கும், மாடுபிடி வீரர்களுக்கும் காயம் ஏற்படாதவாறு தென்னை நார் கழிவுகள் பரப்பப்பட்டு இருந்தது. பார்வையாளர்கள் அமர்வதற்காக மிகவும் பாதுகாப்பான முறையில் காலரிகள் அமைக்கப்பட்டிருந்தது.



முதலில் வாடிவாசலில் இருந்து கிராமத்து சுவாமி காளைகள் வரிசையாக அவிழ்த்து விடப்பட்டன. அதை வீரர்கள் யாரும் பிடிக்கவில்லை. ஆன்லைன் மூலம் பதிவு செய்த தகுதியான 1000 காளைகள் இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் அவிழ்த்துவிடப்பட்டன. தகுதி பெற்ற 600 மாடுபிடி வீரர்கள் ஒவ்வொரு சுற்றாக களத்தில் அனுமதிக்கப்பட்டனர். ஒவ்வொரு சுற்றிலும் வெவ்வேறு நிறத்திலான, அதாவது மஞ்சள், பிங்க், நீலம், ஆரஞ்சு, பச்சை என சீருடையில் மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர்.

திண்டுக்கல், திருச்சி, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்பட்டு தகுதியான காளைகள் லாரி, வேன்களில் கொண்டு வரப்பட்டு இந்த ஜல்லிக்கட்டில் கலந்து கொண்டன. இந்த காளைகள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக வாடிவாசலில் இருந்து அவிழ்த்து விடப்பட்டது.

அதில் சிறப்பாக விளையாடி அதிக காளைகளை அடக்கும் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு அடுத்தடுத்த சுற்றுக்கு அனுப்பப்பட்டனர். சீறி பாய்ந்து வந்த காளைகளை மல்லுக்கட்டி காளையர்கள் அடிக்கினார்கள். மேலும் வாடிவாசலில் நின்று விளையாடும் சிறந்த காளைகளையும் மாவட்ட நிர்வாகம் கண்காணித்து வந்தனர். பல காளைகள் சீறிப்பாய்ந்து வாடிவாசலில் இருந்து வெளியேறி பிடிபடாமல் சென்று பரிசுகளை தட்டிச் சென்றது. மாடுபிடி வீரர்களும் சீறிப்பாய்ந்த காளைகளை அடக்கி பரிசுகளைப் பெற்றனர்.

ஒவ்வொரு சுற்றிலும் வெற்றி பெறும் மாடுபிடி வீரர்களுக்கும், மாட்டு உரிமையாளர்களுக்கும் விழா குழுவினர் தங்கம், வெள்ளி நாணயம், சைக்கிள், கட்டில், பீரோ, மிக்சி, விலை உயர்ந்த டிவி உள்ளிட்ட வீட்டு உபயோக பொருட்களை பரிசாக வழங்கினர்.

முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி உருவம் பொறித்த தங்க மோதிரங்களை ஒவ்வொறு சுற்றிலும் வெற்றி பெறும் வீரருக்கு அமைச்சர் உதயநிதி வழங்கினார்.

விழா முடிவில் சிறந்த மாடுபிடி வீரருக்கு தமிழக முதல்வர் சார்பில் ரூ.10 லட்சம் மதிப்பிலான கார் மற்றும் சிறந்த காளைக்கு விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கும் கார் பரிசாக வழங்கப்பட உள்ளது. மேலும் சிறந்த காளை மற்றும் மாடுபிடி வீரருக்கு இரண்டாம் பரிசாக பைக் வழங்கப்பட இருக்கிறது.

மதியம் 1 மணி வரை நடைபெற்ற 5 சுற்றுகளில் மொத்தம் 363 காளைகள் அவிழ்த்துவிடப்பட்டுள்ளன. இதில் 124 காளைகள் பிடிக்கப்பட்டுள்ளன.

அபிசித்தர் மற்றும் திவாகர் ஆகிய 2 மாடுபிடி வீரர்களும் தலா 11 காளைகளை அடக்கி முதல் இடத்தில் உள்ளனர். தலா 7 காளைகளை அடக்கி பாலமுருகன் மற்றும் தமிழரசன் இருவரும் 2-வது இடத்தில் உள்ளனர்.

5வது சுற்றுவரை மாடுபிடி வீரர்கள், மாட்டின் உரிமையாளர்கள், காவலர்கள் மற்றும் பார்வையாளர்கள் என மொத்தம் 39 பேர் காயமடைந்துள்ளனர்.

# 107-வது பிறந்த நாள் தமிழகம் முழுவதும் கோலாகலம் சென்னையில் எம்.ஜி.ஆர். சிலைக்கு எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மரியாதை 107 கிலோ கேக் வெட்டி, சேலை, அன்னதானம் வழங்கினார்

சென்னை, 17 ஜனவரி 2024: எம்.ஜி.ஆரின் 107 வது பிறந்த நாள் இன்று தமிழகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

எம்.ஜி.ஆரின் 107 வது பிறந்த நாளான இன்று காலை (17 ந் தேதி), அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, சென்னை ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலை, தலைமைக் கழக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள, எம்.ஜி.ஆரின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, ஜெயலலிதாவின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தியதோடு, கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். அங்கே குழுமியிருந்த கழக தொண்டர்கள், நிர்வாகிகள், பத்திரிகையாளர்களுக்கு இனிப்பு வழங்கினார். தொடர்ந்து, தலைமைக் கழகச் செயலாளர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



அடுத்ததாக, தலைமைக் கழக இணைப்புக் கட்டட வளாகத்தில், எடப்பாடி பழனிசாமி, எம்.ஜி.ஆர். பிறந்த நாளையொட்டி, அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத்தின் சார்பில் தயார் செய்யப்பட்டிருந்த 107 கிலோ எடை கொண்ட கேக்கினை வெட்டி, கழக நிர்வாகிகளுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வழங்கினார்.

தொடர்ந்து, எடப்பாடி பழனிசாமி, மகளிருக்கு சேலை வழங்கி, தமது நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டார். அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத்தின் சார்பில் இவற்றிற்கான ஏற்பாடுகள் சிறப்பான முறையில் செய்யப்பட்டிருந்தன.

தொடர்ந்து, தலைமைக் கழக வளாகம் எதிரில், எடப்பாடி பழனிசாமி, கழக அமைப்புச் செயலாளரும், தென் சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்டக் கழகச் செயலாளருமான ஆதிராஜாராம் ஏற்பாட்டின்பேரில், திருவல்லிக்கேணி மேற்கு பகுதி, 119 கிழக்கு வட்டக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் அன்னதானம் மற்றும் மகளிருக்கு சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

எம்.ஜி.ஆரின் பிறந்த நாளையொட்டி தமிழகம் முழுவதும் ஆங்காங்கே எம்.ஜி.ஆரின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. எம்.ஜி.ஆரின் படங்களும் அலங்கரித்து வைக்கப்பட்டு தேங்காய் உடைத்து ஊதுபத்தி ஏற்றி வழிபட்டனர்.

சென்னை தலைமைக்கழகத்தில் நடந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன், பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் எம்.எல்.ஏ., பொன்னையன், எஸ்.பி.வேலுமணி, பி.தங்கமணி, பா.வளர்மதி, எஸ்.கோகுல இந்திரா, ஜெயக்குமார், கடம்பூர் ராஜூ, மாவட்ட செயலாளர்கள் நா.பாலகங்கா, தி.நகர் பி.சத்தியா, விருகை ரவி, ஆதிராஜாராம், டி.ஜி.வெங்கடேஷ்பாபு, ஆர்.எஸ். ராஜேஷ், எம்.கே.அசோக், பா.பென்ஜமின், கே.பி.கந்தன் மற்றும் வாலாஜாபாத் கணேசன், அமைப்பு செயலாளர் ராயபுரம் மனோ, ஒன்றிய செயலாளரும், ஜெயலலிதா பேரவை துணை செயலாளருமான பெரும்பாக்கம் ராஜசேகர், எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணை செயலாளர் சந்தான கிருஷ்ணன், கே.பி.கே.சதீஷ்குமார், முன்னாள் எம்.எல்.ஏ. கே.குப்பன், நேதாஜி கணேசன், இலக்கிய அணி இணை செயலாளர் டி.சிவராஜ், வட்ட செயலாளர் கே.துளசி, வழக்கறிஞர் ஆர்.சதாசிவம், மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் பிராட்வே எம்.இஸ்மாயில்கனி, வி.எஸ்.வேல் ஆதித்தன், பி.சின்னையன், தி.நகர் கோ.சாமிநாதன், ராணி அண்ணாநகர் தி.கோவிந்தன் உட்பட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

எம்.ஜி.ஆரின் 107-ஆவது பிறந்த நாளையொட்டி, சாலையின் இருமருங்கிலும் கழகக் கொடித் தோரணங்கள், வரவேற்புப் பதாகைகள் அழகுற அமைக்கப்பட்டு, தொண்டர்கள் கழகக் கொடிகளை தங்கள் கைகளில் ஏந்திய வண்ணம், எடப்பாடி பழனிசாமிக்கு வாழ்த்து சொல்லி எழுச்சிமிகு வரவேற்பை அளித்தனர்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## புதுச்சேரியின் புதிய அடையாளம் - ஓவியர் ஏ.பி.ஸ்ரீதரின் 'ஒண்டர்ஸ் ஆஃப் ஒய்ட் டவுன் மியூசியத்தை திறந்து வைத்த மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி



சென்னை, 17 ஜனவரி 2024: ஓவியங்கள் மூலம் உலக அளவில் பெயர் பெற்றவர் ஏ.பி.ஸ்ரீதர். இவருடைய கைவண்ணத்தில் விண்டேஜ் கேமரா, கிளிக் ஆர்ட், 3டி ஓவியம், மெழுகு சிலை உள்ளிட்ட பலவகை உள்ளது.

தற்போது இவரது கைவண்ணத்தில் புதுச்சேரியின் பாரம்பரியமிக்க ஒய்ட் டவுன்- இல் பிரமாண்ட கலாச்சார நிறுவனம் 'ஒண்டர்ஸ் ஆஃப் ஒய்ட் டவுன்' என்ற மியூசியம் தைத்திருநாளை முன்னிட்டு ஜனவரி 15-ஆம் தேதி மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி அவர்களால் திறக்கப்பட்டு இருக்கிறது.

வில்லா குகா, ரூ சுஃப்ரென், புதுச்சேரி - 605001 என்ற முகவரியில் உருவாகி இருக்கும் 'ஒண்டர்ஸ் ஆஃப் ஒய்ட் டவுன்', இந்தியாவின் அருங்காட்சியக மனிதராக அறியப்படும் ஏ.பி.ஸ்ரீதர் மற்றும் திரு.வே.குகன் இணைந்து உருவாக்கி உள்ளனர்.

லைவ் ஆர்ட் மியூசியம், டெடி மியூசியம் மற்றும் ஃபிஷ் மியூசியம் என மூன்று பிரத்யேக அருங்காட்சியகங்கள் இதில் இடம் பெற்றுள்ளது. இந்த கலை மற்றும் கலாச்சார மையத்தை கட்டடத்துறையில் புகழ்பெற்ற அகிலன் ஆர் வடிவமைத்துள்ளார். மெழுகு சிலை சிற்பங்கள், கொண்ட லைவ் ஆர்ட் மியூசியத்தில் உலகின் பிரபல தலைவர்களான மகாத்மா காந்தி, அப்துல் கலாம், மதர் தெரேசா, ரவீந்திரநாத் தாகூர் உள்ளிட்ட பலர் தத்ரூபமாக இருக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் உலகின் மிக உயரமான மனிதன் மற்றும் குள்ளமான மனிதன் பார்க்க உண்மையாகவே காட்சியளிக்கும் சிலிகான் சிலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

டெடி மியூசியம் மனித குலத்தின் சர்வதேச அழகியல், குழந்தை பருவ நினைவுகளை கொண்டாடும் வகையில் உருவாக்கப்பட்டு இருக்கிறது. 195 நாடுகளின் பாரம்பரிய மிக்க உடைகளில் 500 டெடி பொம்மை மறு உருவாக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. ஃபிஷ் மியூசியத்தில் நீருக்கடியில் உள்ள எண்ணற்ற உயிரினங்களை தழுவி உருவாக்கப்பட்ட சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த மியூசியத்தை புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி திறந்து வைத்து ஓவியர் ஏ.பி.ஸ்ரீதர் மற்றும் அவரது குழுவினரை வாழ்த்தினார். மேலும் அவர் கூறும்போது, மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ள, தலைவர்களின் சிலிகான் சிலைகள் சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் இந்த மியூசியம் அமைந்துள்ளது பாராட்டுக்குரியது. சுற்றுலா பயணிகள், மாணவர்கள், சிறுவர்கள், இளைஞர்கள் இந்த மியூசியத்தை பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது இருக்கிறது. கலையம்சம் பொருந்திய நல்ல அருங்காட்சியம் அமைந்து இருப்பது சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் பிடிக்கும். சுற்றுலாவுக்கு புதுச்சேரி அரசு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதற்கு உறுதுணையாக இந்த அருங்காட்சியகம் அமைந்து இருப்பது எங்களுக்கு சிறப்பு என்று பாராட்டி கூறினார்.

## சிக்னிஃபை பார்ட்னர் மஹாவீர் 50 வயதில் ஜொலிக்கிறார்: சென்னை விமான நிலைய ரெட்ரோஃபிட் லைட்டிங் திட்டத்துடன் கொண்டாட்டங்களைக் குறிக்கிறது



சென்னை, 17 ஜனவரி 2024: சிக்னிஃபை (ஈயூரோனெக்ஸ்ட்: லைட்), லைட்டிங் துறையில் உலகின் முன்னணி நிறுவனமான மஹாவீர் எலக்ட்ரிக் ஏஜென்சிஸ், லைட்டிங் துறையில் 50 ஆண்டுகால சிறந்து விளங்குவதைக் கொண்டாடும் போது பெருமையுடன் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது. இந்த குறிப்பிடத்தக்க பயணம், சிக்னிஃபை இந்தியா (முன்னாள் பிலிப்ஸ் லைட்டிங் இந்தியா) உடனான முன்னோடி கூட்டாண்மை மூலம் குறிக்கப்பட்டுள்ளது, இது மகாவீர் எலக்ட்ரிக் ஏஜென்சிகளை நாட்டின் தொழில்முறை லைட்டிங் நிலப்பரப்பின் உச்சத்திற்கு கொண்டு சென்றது.

மஹாவீர் எலக்ட்ரிக் ஏஜென்சிஸ் மற்றும் சிக்னிஃபை இந்தியா இடையேயான ஒத்துழைப்பு புதுமை, படைப்பாற்றல் மற்றும் நடைமுறைத்தன்மை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை பிரதிபலிக்கிறது, இதன் விளைவாக சிறந்த விளக்கு தீர்வுகள் கிடைக்கும். ஒன்றாக, இரண்டு நிறுவனங்களும் பொதுவான நோக்கங்களைப் பின்தொடர்ந்தன, ஒவ்வொரு வடிவமைப்பையும் படைப்பாற்றல் மற்றும் செயல்பாட்டு சிறப்பின் சரியான கலவையுடன் பிரதிபலிக்கிறது

கிரேட்டர் இந்தியாவின் சிக்னிஃபையின் தலைமை நிர்வாக அதிகாரி சுமித் ஜோஷி, "வாங்குபவர்களின் அபிலாஷைகளை இணைக்கும் ஒரு முக்கியமான பாலமாக மகாவீர் எலக்ட்ரிக் ஏஜென்சிகளை நாங்கள் அங்கீகரிக்கிறோம். தொழில்துறையில் அவர்களின் 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில், நாங்கள் இணைந்து அடைந்த வெற்றிக்காக மஹாவீர் எலக்ட்ரிக் ஏஜென்சிகளை வாழ்த்துவதோடு, உங்கள் பங்களிப்புகளுக்கும் அர்ப்பணிப்புக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறந்த தரமான தீர்வுகளை வழங்க எங்களுடன் இணைந்து பணியாற்றும் இந்தத் திறனைக் கொண்ட ஒரு வழங்குநரைக் கொண்டிருப்பது, எங்கள் குழுவிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

சுரேஷ் கே. லுனாவத் கூறுகையில், "விளக்கு துறையில் எங்கள் 50 ஆண்டுகால பயணத்தை கொண்டாடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் 40 ஆண்டுகளுக்கும் மேலாக எங்கள் ஆதரவின் மூலக்கல்லான சிக்னிஃபைக்கு மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம். அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு நமது வளர்ச்சிப் பாதையை வழிநடத்துவதில் முக்கியமானது. பரஸ்பர வெற்றிக்கான எங்கள் உறுதிப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம், கைகோர்த்து முன்னேறுகிறோம்.. இந்த மைல்கல்லை நாங்கள் கொண்டாடும் போது, எதிர்காலத்திற்கான எங்கள் பார்வை ஒளிமயமாகவே உள்ளது - எங்கள் கூட்டாண்மை தொடர்ந்து பிரகாசிக்கும், புதுமையான பாதைகளை ஒளிரச் செய்யும்.

மஹாவீர் எலக்ட்ரிக் ஏஜென்சிகளுடன் இணைந்து, சிக்னிஃபை பல முக்கிய திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. ஃபாக்ஸ்கான் இண்டஸ்ட்ரீஸ், ஏஏஐ சென்னை, தாஜ் வெலிங்டன் ஓஎம்ஆர், ஃப்ரெஷ் ஒர்க்ஸ் ஸ்டேடியம் சிலவற்றைக் குறிப்பிடலாம். இது தெற்கு பிராந்தியத்தில் பிரிவுகள் முழுவதும் சிக்னிஃபை வணிகத்தின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக, சிக்னிஃபை க்கான தொழில்முறை விநியோக வணிகத்திற்கான மிகப்பெரிய சேனல் கூட்டாளராக இது உள்ளது மஹாவீர் எலெக்ட்ரிக் ஏஜென்சீஸ் தனது 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த வேளையில், சிக்னிஃபை இந்த நீடித்த கூட்டாண்மையின் தொடர்ச்சியான வெற்றியை எதிர்நோக்குகிறது, இது விளக்கு உலகில் பிரகாசத்தை உருவாக்குகிறது.

## இந்தியாவில் உள்ள தொழில் வல்லுநர்கள் 88% ஒரு புதிய வேலையைக் கருத்தில் கொண்டு 2024 இல் தங்கள் வாழ்க்கையை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளனர்

சென்னை, 17 ஜனவரி 2024: பொருளாதார நிச்சயமற்ற தன்மையை எதிர்கொண்டு தொழில்சார் நகர்வுகள் குறித்து தொழில் வல்லுநர்கள் இனி எச்சரிக்கையாக இருக்க மாட்டார்கள். உலகின் மிகப்பெரிய தொழில்முறை வலையமைப்பான லிங்க்ட்இன் இன் புதிய ஆராய்ச்சி, இந்தியாவில் உள்ள 10ல் 9 (88%) தொழில் வல்லுநர்கள் 2024 ஆம் ஆண்டில் ஒரு புதிய வேலையைப் பற்றி ஆலோசித்து வருகின்றனர், இது 2023 உடன் ஒப்பிடும்போது 4% அதிகரித்துள்ளது.

தொழில் வல்லுநர்கள் இனி அதைத் தவிர்க்கத் தயாராக இல்லாத மனப்பான்மையில் இது ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது, அதற்கு பதிலாக, அவர்கள் தங்கள் தொழிலின் உரிமையை எடுத்துக்கொள்கிறார்கள் மற்றும் உற்பத்தித்திறன் மற்றும் தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதன் மூலம் இழந்த நேரத்தை ஈடு செய்ய விரும்புகிறார்கள். 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் 9% அதன் தளத்தில் விரைவான வளர்ச்சியால் இயக்கப்படும் சில வேலைகளைச் செய்வதற்குத் தேவையான திறன்களில் விரைவான மாற்றத்தைத் தக்கவைத்துக்கொள்வது அவர்களுக்கு கடினமாக உள்ளது. ஏறக்குறைய பாதி (45%) தொழில் வல்லுநர்கள் தங்கள் திறமைகளை தாங்கள் விரும்பும் வேலைக்கு எவ்வாறு பொருத்துவது என்று தெரியவில்லை, இதனால் வேலை தேடும் செயல்முறை மிகவும் கடினமாகிறது. இந்தியாவில் 2015 முதல் வேலைகளுக்கான திறன்கள் 30% மாறிவிட்டதாக லிங்க்ட்இன் தரவு காட்டுகிறது. 55% பேர் வேலை தேடுவது வெறுப்பாக இருக்கிறது என்றும் 59% பேர் ஆட்சேர்ப்பு செய்பவர்களிடம் இருந்து கேட்பது அரிதாகவே உள்ளது என்றும் தொழில் வல்லுநர்கள் வேலை தேடுவது கடினமாக உள்ளது.

தொழில் வல்லுநர்கள் தங்கள் வேலை தேடும் அணுகுமுறையை மாற்றுகிறார்கள்

கடுமையான போட்டிக்கு மத்தியில், தொழில் வல்லுநர்கள் கூட்டத்திலிருந்து தனித்து நிற்க தங்கள் வேலை தேடும் அணுகுமுறையை மாற்றுகிறார்கள். 72% தொழில் வல்லுநர்கள், வீடியோ மற்றும் டிஜிட்டல் ரெஸ்யூம்கள் போன்ற புதிய வடிவங்களைப் பரிசோதிப்பது போன்ற வேலை தேடும் அணுகுமுறையை மாற்றியுள்ளதாகக் கூறியுள்ளனர். ஏஐ ஐப் பயன்படுத்துவதில் அவர்கள் ஆர்வமாக உள்ளனர், சுமார் 81% தொழில் வல்லுநர்கள் இது அவர்களின் வேலை மிகவும் திறமையாகவும் உற்பத்தி செய்யவும் உதவும் என்று கூறுகிறார்கள்.

அவர்கள் தங்கள் தொழில்முறை பிராண்டை உருவாக்குவதில் முதலீடு செய்வதன் மூலமும், வேலையில் இறங்குவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க உதவும் இணைப்புகள் மூலமும் தங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகிறார்கள். 79% வல்லுநர்கள் லிங்க்ட்இனில் அதிக உள்ளடக்கத்தை இடுகையிடுகிறார்கள் மற்றும் 83% பேர் தங்கள் தொழில்முறை நெட்வொர்க்கை வளர்ப்பதில் மிகவும் தீவிரமாக உள்ளனர்.

லிங்க்ட்இன் இந்தியாவிற்கான தொழில் நிபுணரும் மூத்த நிர்வாக ஆசிரியருமான நிரஜிதா பானர்ஜி கூறுகையில், "2024 ஆம் ஆண்டில் இந்திய தொழில் வல்லுநர்கள் தங்கள் வாழ்க்கையைப் பொறுப்பேற்கும்போது, வேலைச் சந்தையில் நுழையும் அதிக நிபுணர்களுடன் இது அதிகப் போட்டித்தன்மையை அடையப் போகிறது. தங்கள் வேலை வெற்றிபெற, தொழில் வல்லுநர்கள் தங்கள் சுயவிவரங்களை மேம்படுத்தவும், அவர்களின் திறமைகளை முன்னிலைப்படுத்தவும், தொழில்துறை மேம்பாடுகளைப் பற்றித் தெரிந்துகொள்ளவும் நேரத்தை ஒதுக்குவது அவசியம்.. இது அவர்கள் விரும்பும் வேலையைக் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கவும், தங்கும் சக்தியுடன் ஒரு தொழிலை உருவாக்கத் தேவையான திறன்களை வளர்க்கவும் உதவும்.

லிங்க்ட்இன் இலவச லிங்க்ட்இன் கற்றல் பாடப்பிரிவுகளையும் திறந்துள்ளது, அதாவது வேலை பெறுவதற்கான தொழில் உத்தியாளர் வழிகாட்டி; மறுசீரமைப்பு, பணிநீக்கங்கள் மற்றும் மற்றும் மந்தநிலை-தொழில் உத்திகள் மூலம் உங்கள் வாழ்க்கையை வழிநடத்துதல். இந்தப் படிப்புகள் 17 ஜனவரி 2024 முதல் ஜூலை 1, 2024 வரை கிடைக்கும்.

அதிகரித்து வரும் வேலைகள் - வேலையின் எதிர்காலத்தை வரையறுக்கும் வேகமாக வளர்ந்து வரும் போக்குகள்

லிங்க்ட்இனின் சமீபத்திய வேலைகள் உயர்வு பட்டியலில் கடந்த ஐந்து ஆண்டுகளில் வேகமாக வளர்ந்து வரும் வேலைகள் பற்றிய புதிய நுண்ணறிவுகளை வழங்குகிறது, இது வேலையின் எதிர்காலத்தை வரையறுக்கும் போக்குகள் மற்றும் நீண்ட கால வாய்ப்புகள் எங்குள்ளது என்பதைக் கண்டறியும். இந்தியாவில், க்ளோசிங் மேனேஜர், இன்ஃப்ளூயன்சர் மார்க்கெட்டிங் ஸ்பெஷலிஸ்ட் மற்றும் டிசைன் ஸ்பெஷலிஸ்ட் ஆகியவை 2024ல் 79%க்கும் அதிகமான வளர்ச்சி விகிதங்களுடன் வேகமாக வளர்ந்து வரும் முதல் மூன்று வேலைகளாகும். இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் 'டாப் 15' வேலைகளை கீழே உள்ள பின்னிணைப்பில் காணலாம்.

லிங்க்ட்இன், தொழில் வல்லுநர்கள் தங்கள் வேலை தனித்து நிற்க உதவும் புதிய அம்சங்களை அறிமுகப்படுத்துகிறது

தொழில் வல்லுநர்கள் முன்னோக்கி நிற்கவும் தனித்து நிற்கவும் உதவும் வகையில், லிங்க்ட்இன் இரண்டு புதிய வேலை அம்சங்களையும் வெளியிடுகிறது, இது தொழில் வல்லுநர்களுக்கு அவர்களின் வேலை தேடலில் அதிக ஏஜென்சியை வழங்குகிறது: வேலை சேகரிப்புகள் மற்றும் புதிய விருப்பத்தேர்வுகள் அம்சங்கள். புதிய வாழ்க்கைப் பாதைகளை ஆராய அல்லது தங்கள் எல்லைகளை விரிவுபடுத்த விரும்பும் நிபுணர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது, லிங்க்ட்இன் இப்போது பல்வேறு தொழில்கள், சிறப்புகள் மற்றும் நிறுவனங்கள், சார்பு விளையாட்டு வேலைகள், தொலைதூர வேலைகள் அல்லது ஸ்டார்ட்அப்களில் உள்ள வேலைகள் போன்ற தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் தொடர்புடைய வேலைகளின் தொகுப்புகளைக் முன்னிலைப்படுத்தி காண்பிக்கும்.

பிரீமியம் சந்தாதாரர்கள் தங்கள் வாழ்க்கையை மிகைப்படுத்த விரும்பும், லிங்க்ட்இன் சமீபத்தில் டாப் சாய்ஸ் போன்ற அம்சங்களை அறிமுகப்படுத்தியது, அவர்கள் ஒரு பாத்திரத்தில் அவர்கள் வலுவான ஆர்வத்தை ஆட்சேர்ப்பு செய்பவர்களுக்கு அடையாளம் காட்டுகின்றனர். இது அவர்களின் தெரிவுநிலையை அதிகரிக்க உதவும் - டாப் சாய்ஸைப் பயன்படுத்தும் போது, பணியமர்த்துபவர்களிடமிருந்து அவர்கள் மீண்டும் செய்தியைப் பெறுவதற்கான வாய்ப்பு 43% அதிகம். சந்தாதாரர்கள் தங்கள் தேடலை கூட்டலாம் மற்றும் தங்கள் நெட்வொர்க்கிற்கு வெளியே அல்லது வெளியே தீவிரமாக பணியமர்த்துபவர்களைப் பார்க்க மக்கள் தேடலைக் குறைப்பதன் மூலம் நேரத்தைச் சேமிக்கலாம்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# இந்தியாவில் உள்ள தொழில் வல்லுநர்கள் 88% ஒரு புதிய வேலையைக் கருத்தில் கொண்டு 2024 இல் தங்கள் வாழ்க்கையை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளனர்

சென்னை, 17 ஜனவரி 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங் இன்று மிகவும் பிரபலமான கேலக்ஸி எ05எஸ், எ54 5ஜி மற்றும் கேலக்ஸி எ34 5ஜி ஸ்மார்ட்போன்களில் அற்புதமான சலுகைகளை அறிவித்துள்ளது.

ஒரு சிறப்புச் சலுகையாக, வாடிக்கையாளர்கள் கேலக்ஸி எ05எஸ் ஐ உடனடி ரூ. 2000 தள்ளுபடியுடன் வாங்கலாம். முதலில் ரூ. 13499 (4ஜி பி 128ஜி பி) மற்றும் ரூ. 14999 (6ஜி பி 128ஜி பி) விலையில், நுகர்வோர் முறையே ரூ. 11499 மற்றும் ரூ. 12999க்கு பெறலாம். விதிவிலக்கான செயல்திறனுக்காக குவால்காம் ஸ்னாப்டிராகன் 680 ஆல் இயக்கப்படுகிறது மற்றும் ஒரு பெரிய 6.71 "முழு எச் டி 90எச் இசட் டிஸ்ப்ளே, கேலக்ஸி எ05எஸ் தடையற்ற மற்றும் அதிவேகமான பார்வைக்கு ஏற்றதுபயனர்கள் அதன் 50எம் பி மெயின் ஷூட்டர் மூலம் துடிப்பான புகைப்படங்களைப் பிடிக்கலாம் மற்றும் 25டபிள்யூ சூப்பர்-ஃபாஸ்ட் சார்ஜிங்கை ஆதரிக்கும் 5000 எம் எ எச் பேட்டரி மூலம் நீண்ட கால ஆற்றலை அனுபவிக்க முடியும். கேலக்ஸி எ05எஸ் 4 வருட பாதுகாப்பு புதுப்பிப்புகள் மற்றும் 2 தலைமுறை ஓ எஸ் மேம்படுத்தல்களுடன் எதிர்காலத்தில் தயாராக இருக்கும். கேலக்ஸி எ05எஸ் சில்லறை விற்பனை கடைகள், Sãmsung.com மற்றும் பிற ஆன்லைன் பிளேயர்களில் கிடைக்கிறது.

வாடிக்கையாளர்கள் இப்போது கேலக்ஸி எ34 5ஜி ஐ வாங்கலாம், இதன் அசல் விலை ரூ. 30999 இல் தொடங்கும், ரூ. 25999 இன் பயனுள்ள விலையில் ரூ. 3500 கேஷ்பேக் மற்றும் ஆக்சிஸ் வங்கி கார்டு பயனர்களுக்கு ரூ. 1500 கூடுதல் பேங்க் கேஷ்பேக். ஏ எல்பிள்யூசம் கேலக்ஸி எ54 5ஜி ஐ வாங்க விரும்புபவர்கள் இப்போது 8ஜி பி 128ஜி பி மாறுபாட்டை வெறும் ரூ. 33499 இல் சொந்தமாக்கிக் கொள்ளலாம், ஆரம்ப விலையான ரூ. 38999 இலிருந்து குறைக்கப்பட்டது. இந்தச் சலுகையில் ரூ. 3500 கேஷ்பேக் மற்றும் ஆக்சிஸ் வங்கி கார்டு பயனர்களுக்கு கூடுதல் ரூ. 2000 ஆகியவை அடங்கும். கூடுதலாக, நுகர்வோர் தேடுகிறார்கள்

கேலக்ஸி எ54 5ஜி மற்றும் கேலக்ஸி எ34 5 ஜி ஆகியவை கடினமானவை, ஐபி 67 மதிப்பீட்டில் கசிவு மற்றும் ஸ்பிளாஸ் எதிர்ப்பை வழங்குகின்றன. அவை 1 மீட்டர் சுத்தமான தண்ணீரை 30 நிமிடங்களுக்கு தாங்கும் மற்றும் தூசி-எதிர்ப்பு, எந்த சாகசத்திற்கும் ஏற்றது. ஏ54 இல் 50எம் பி ஓ ஐ எஸ் முதன்மை லென்ஸ் மற்றும் ஏ34 இல் 48எம் பி மற்றும் 5எம் பி மேக்ரோ லென்ஸ் உள்ளிட்ட சக்திவாய்ந்த கேமராக்களுடன், அவை பிரபலமான 'நைட்டோகிராஃபி' அம்சத்தை அறிமுகப்படுத்துகின்றன. . இந்த ஸ்டைலான சாதனங்கள் மிதக்கும் கேமரா அமைப்பு, வண்ணம் பொருந்தக்கூடிய மெட்டல் கேமரா டெகோ மற்றும் 5000 எம் எ எச் பேட்டரி ஒருமுறை சார்ஜ் செய்தால் 2 நாட்களுக்கு மேல் நீடிக்கும். பயனர்கள் சாம்சங் வாலட், வாய்ஸ் ஃபோகஸ் மற்றும் இரட்டை டால்பி-பொறியியல் ஸ்டீரியோ ஸ்பீக்கர்களை பொழுதுபோக்குக்காக அனுபவிக்க முடியும்.

சூப்பர் அமோல்ட் டிஸ்ப்ளேக்கள், 1000 நிட்ஸ் பிரகாசம் மற்றும் மென்மையான மாற்றங்களுக்கான 120எச் இசட் புதுப்பிப்பு வீதம் ஆகியவற்றில் நுகர்வோர் உண்மையான வண்ணங்களை அனுபவிக்க முடியும். சாம்சங்-ன் நாக்ஸ் உடன் பாதுகாக்கப்பட்டு, அவை நிகழ்நேர தரவுப் பாதுகாப்பை வழங்குகின்றன. நான்கு ஓ எஸ் மேம்படுத்தல்கள் மற்றும் 5 வருட பாதுகாப்பு புதுப்பிப்புகளுடன், கேலக்ஸி எ54 5ஜி மற்றும் கேலக்ஸி எ34 5ஜி ஆகியவை நீடித்த செயல்திறனை உறுதி செய்கின்றன.

கேலக்ஸி எ05எஸ், கேலக்ஸி எ34 5ஜி மற்றும் கேலக்ஸி எ54 5ஜி ஆகியவை சில்லறை கடைகள், Samsung.com மற்றும் பிற ஆன்லைன் பிளேயர்களில் கிடைக்கின்றன.

# ஓமலூர் அருகே பொங்கல் விழாவில் மாட்டு வண்டி ஓட்டிய எடப்பாடி பழனிசாமி வழிநெடுகிலும் பொதுமக்கள் வரவேற்பு

சென்னை, 17 ஜனவரி 2024: ஓமலூர் அருகே நடந்த பொங்கல் விழாவில் எடப்பாடி பழனிசாமி சுமார் 1 கி.மீ. தூரம் மாட்டு வண்டி ஓட்டினார்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே திண்டமங்கலம் ஊராட்சி பனங்காட்டூரில் அண்ணா தி.மு.க. சார்பில் பொங்கல் விழா மற்றும் நல உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பனங்காட்டூர் பிரிவு ரோட்டுக்கு காரில் வந்தார். அங்கு இருந்த மாட்டு வண்டியில் ஏறிய எடப்பாடி பழனிசாமி சுமார் 1லு கி.மீ. தொலைவில் உள்ள மாரியம்மன் கோவில் திடல் விழா மேடை வரை மாட்டு வண்டியை ஓட்டி வந்தார்.

வழிநெடுக அவருக்கு கட்சி யினரும், பொது மக்களும், மலர் தூவியும், மேளதாளங்கள் முழங்க கிராமிய நடனத்து டனும் உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி, மாடுகளுக்கு அகத்திக்கீரை, பசுந்தீவனங்களை வழங்கி னார்.

பின்னர் அங்குள்ள மாரியம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். முன்னதாக பாலிக்கடை, திண்டமங்கலம், பனங்காட்டூர் உள்ளிட்ட இடங்களில் கட்சிக் கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

விழாவில் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பொங்கல் விழாவை தொடங்கி வைத்தார். பின்னர் அவர் நலத்திட்ட உதவிகளை வழங்கியதுடன் பொது மக்களுக்கு பொங்கலும் வழங்கினார்.

'தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். இந்த ஆண்டு அனைவருக்கும் மகிழ்ச்சியான ஆண்டாக நாட்டு மக்களுக்கு அமைந்திருக்கிறது. நானும் விவசாயி என்ற முறையில் எனது இல்ல நிகழ்ச்சியாக இதனை பார்க்கிறேன். கிராமத்தில் பிறந்து வாழ்ந்தவனுக்கு தான் தைத்திருநாள் அருமை தெரியும். நாட்டின் முதுகெலும்பு கிராமம். கிராமம் வளர்ச்சி அடைந்தால் தான் நாடு வளர்ச்சி அடையும். தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற 2லு ஆண்டு காலத்தில் மக்கள் என்ன நன்மையை பார்த்தார்கள். ஏழை மக்களுக்கு என்ன திட்டத்தை கொண்டு வந்து செயல்படுத்தினார்கள் என்றால் ஒன்றும் இல்லை. 2லு ஆண்டு காலத்தை வீணடித்தது தான் மிச்சம். கொள்ளையடித்தது தான் சாதனை.

சுமார் 30 ஆயிரம் கோடி ரூபாயை ஊழல் செய்து சம்பாதித்த பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் அமைச்சர்கள் இருக்கின்றனர் என இந்த ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்து வேறு துறைக்கு மாற்றப்பட்டவர் சொல்கிறார்.

இன்றைய தினம் ரேஷன் கடையில் பாமாயிலை நிறுத்தப்போவதாக தகவல் வருகிறது. இதனை வன்மையாக கண்டிக்கிறோம். ஏழை மக்களுக்கு வழங்கக்கூடிய ரேஷன் பொருட்களை முறையாக வழங்க வேண்டும்.

கொரோனா காலத்தில் கஷ்டத்தை காக்க அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் ரூ.1000 வழங்கினோம். பொங்கல் பண்டிகைக்கு ரூ.2,500 பொங்கல் தொகுப்போடு வழங்கிய அரசு தான் அண்ணா தி.மு.க. அரசு. எங்கள் அரசே விவசாயிகள் அரசாக இருந்துள்ளது. அவர்களின் கவலைகளை போக்கக்கூடிய அரசாக செயல்பட்டது.

மேட்டூர் அணை கட்டப்பட்டு 83 ஆண்டு காலமாகிறது. தூர்வாரப் படாமல் இருந்த மேட்டூர் அணையில் அண்ணா தி.மு.க. ஆட்சியில் விவசாயிகள், அனுமதி வாங்கி இலவசமாக மண்ணை அள்ளி பயன்படுத்திக்கொண்டனர் . இப்படி நீர்நிலைகள் பாது காக்கப்பட்டது. அதனால் மழைநீர் ஏரிகளில் சேமிக்கப்பட்டது.

இதேபோல் ஏழை, எளிய மக்கள் உள்ள இடங்களில் அம்மா மினி கிளினிக் தொடங்கப்பட்டது. இதில் மக்கள் சிகிச்சை பெற்று வந்தனர். அண்ணா தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட 1,800-க்கும் மேற்பட்ட மினி கிளினிக்குகளை மூடி விட்டனர். அதேபோல் அரசு பள்ளி மாணவ-மாணவிகளுக்கு மடிக்கணினி 10 ஆண்டு காலத்தில் 52 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டது. அதையும் நிறுத்தி விட்டனர். இதேபோல் அண்ணா தி.மு.க. ஆட்சியில் மானிய விலையில் அம்மா ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் போன்ற பல மக்கள் நல திட்டங்களை தி.மு.க. அரசு நிறுத்தி உள்ளது.

குறிப்பாக கால்நடைகள் வளர்ப்பை ஊக்குவிக்க ஆசியாவிலேயே பெரிய கால்நடை பூங்கா ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அண்ணா தி.மு.க. ஆட்சியில் தலைவாசல் பகுதியில் தொடங்கப்பட்டது. இன்னும் அதனை அவர்கள் திறக்கவில்லை.

இந்த கால்நடை பூங்காவால் தரமான பசுக்களை உருவாக்கி விவசாயிகளுக்கு கொடுக்கலாம். அதேபோல் ஆடு, கோழி, பன்றி வளர்ப்பு ஆகியவற்றை தரமாக உருவாக்கி கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டது. அந்த கால்நடை பூங்காவும் மூடி கிடக்கிறது.

# அரசியல் சட்டத்திற்கும் - அச்சட்டம் தந்த கூட்டாட்சி தத்துவத்திற்கும் எதிராக - மத்திய மாநில உறவை மட்டுமின்றி, ஒன்றியத்திற்கே பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் "ஒரே நாடு ஒரே தேர்தல்" திட்டத்தை கைவிடு!





சென்னை, 17 ஜனவரி 2024: ஏற்கனவே 23.12.2023 அன்று சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடத்துவது குறித்த தி.மு.க. வின் கருத்துக்களை கோரியது. இதற்கு தி.மு.க. தன்னுடைய 12.1.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக "ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு" எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதற்குப் பிறகு நேரடி விசாரணைக்கு எவ்வித தகவலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அனுப்பப்படவும் இல்லை. அந்த சட்ட ஆணையத்தின் கருத்துக் கேட்பு தொடர் நடவடிக்கையும் என்னவென்று தெரியவில்லை..

இதில் கவனிக்கதக்க முக்கிய அம்சம் என்னவென்றால், 2022ல் சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் பாராளுமன்றம், மற்றும் மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடத்துவது சம்பந்தமாகத்தான் ஆலோசனைகளைக் கோரியது. ஆனால், தற்பொழுது ஒன்றிய அரசு இதை விரிவுபடுத்தி பாராளுமன்ற மற்றும் மாநில சட்ட சபைகளோடு, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் இணைத்து ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் விதமாக ஆய்வு வரம்புகளை வெளியிட்டுள்ளது. இந்தச் செயல் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராகவும், குடியரசு தலைவர் முறையிலான ஆட்சியை நோக்கியும் செல்வதாகும்.

மி மி - ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட உயர்மட்ட குழு துவக்கத்திலிருந்தே சட்டவிரோதமானதும் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட உயர் மட்ட குழுவானது, அரசியலமைப்பு பிரிவு 73 - ன் கீழ் ஒன்றிய அரசுக்கு அளிக்கப்பட்ட நிர்வாக அதிகாரத்தின் மூலம் அமைக்கப்பட்டதாகும். ஒன்றிய அரசின் நிர்வாக அதிகாரம் என்பது அரசியலமைப்பு சட்டத்திற்கு உயர்வானது அல்ல. சட்டமியற்றும் அதிகாரம் உள்ளவற்றில் மட்டும்தான் பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்க முடியும் என்று வகுத்துல்ல அரசியல் சட்டத்திற்கு விரோதமானதாகும் என்பதால் இந்த உயர் நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளதே செல்லாத ஒன்றாகும். மாநில அரசின் பட்டியலில் உள்ள நகராட்சிகள், பஞ்சாயத்துகளின் தேர்தல் நடைமுறை பற்றி விசாரிக்க ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டுள்ள இந்த உயர்நிலைக்குழுவிற்கு அதிகாரமில்லை என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டவட்டமான கருத்தாகும். அது மட்டுமின்றி இந்த உயர்நிலைக்குழு சட்டவிரோதமானது. அரசியல் சட்டத்திற்கு புறம்பானது.

மி மி மி - பாராளுமன்றம் மற்றும் சட்டசபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது பின்வரும் காரணங்களினால் சாத்தியமற்றது என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறது.

• ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற முறை முற்றிலுமாக நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்று. அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்திற்கு எதிரானது. அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள "சுதந்திரமான, நேர்மையான" தேர்தலுக்கு முற்றிலும் எதிரானது. அரசியல் சட்டத்திற்கு விரோதமானது.

• ஒரே நேரத்தில் தேர்தல் என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்றங்களை முன்கூட்டியே கலைக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்பதாலும் அப்படி கலைப்பது அரசியல் சட்டவிரோதம் என்பதாலும்- இந்த நடைமுறையை திமுக எதிர்க்கிறது.

• ஒன்றிய ஆளுங்கட்சியும் மெஜாரிட்டியை இழந்தால்- ஆட்சி கவிழும். அது போன்ற நிகழ்வில் ஒரே நேரத்தில் தேர்தல் என்ற முன்னெடுப்பிற்கு மீண்டும் இடையூறு ஏற்படும் என்பதைக் கூட ஆலோசிக்காமல் "ஒரே நாடு ஒரே தேர்தல்" முயற்சி நடப்பது நடைமுறை சாத்தியமற்றது.

• ஒரே நேரத்தில் பாராளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் தேர்தல் என்பது அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்திற்கு எதிரானது. அச்சட்டம் வகுந்து தந்துள்ள மத்திய-மாநில உறவு அடங்கிய கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. ஜனநாய நடைமுறையை பலவீனப்படுத்துவதாகும்.

• ஒரே நேரத்தில் தேர்தல் என்பது தேசியக் கட்சிகளுக்கும்- மாநில கட்சிகளுக்கும் இடையே தேர்தல் களத்தில் சமநிலையிலான போட்டியை ஏற்படுத்தி தராது.

• உள்ளாட்சி தேர்தல், சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்கள் ஒரே நேரத்தில் நடத்த முயற்சிப்பது எழுத்தறிவு இன்னும் பெற வேண்டிய கிராமப்புற மக்கள் மத்தியில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

• ஒரே நேரத்தில் தேர்தல் என்றால் அதை எதிர்கொள்ள தேர்தல் ஆணையத்திற்கு- தேர்தல் ஆணையர் எண்ணிக்கை, உள்கட்டமைப்பு எல்லாம் இப்போது இருப்பது போல் 10 மடங்கு உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும். தேர்தல் அதிகாரிகளின் எண்ணிக்கை இப்போது இருப்பதை விட 3 முதல் 5 மடங்கு அதிகரிக்க வேண்டும் என்பதால்- கட்டுக்கடங்காத செலவினத்தை ஏற்படுத்தும் என்பதால் இது நடைமுறை சாத்தியமற்றது.

• நகராட்சிகளும், பஞ்சாயத்துகளும் மாநில அரசின் நிர்வாக அமைப்புகள் என அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவை. ஆகவே இவற்றுக்கும் சட்டமன்றம், பாராளுமன்றத்துடன் தேர்தல் என்பது அரசியல் சட்ட விரோதமானது. இத்தேர்தல் முழுக்க முழுக்க மாநில அரசின் நிர்வாக கட்டுப்பாட்டில் இருப்பதாகும்.

• ஒரே நேரத்தில் நகராட்சி, பஞ்சாயத்து, சட்டமன்றம், பாராளுமன்ற தேர்தலை நடத்த தேர்தல் ஆணையத்திடம் போதிய வாக்குப்பதிவு இயந்திரங்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கே பல லட்சம் கோடி ரூபாயை செலவிட வேண்டிய நிதி சுமை தேர்தல் ஆணையத்திற்கு ஏற்படும் என்பதால் இந்த தேர்தல் நடைமுறையால் நிதி சிக்கனம் ஏற்படாது.

• ஒரே நேரத்தில் தேர்தலை திணிப்பதற்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது மாநில உரிமை மற்றும் அரசியல் சட்டத்தால் மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பறிப்பதாகும். இது மத்திய ரூ மாநில அரசு உறவுகளில் மட்டுமல்ல- ஒன்றியத்திற்கே கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்து மிக்க முயற்சி.

• மத்திய மாநில அரசு உறவுகளுக்கும், ஒன்றியத்திற்குமே அச்சுறுத்தலாக இருக்கும் இது போன்ற தேர்தல் நடைமுறை பற்றிய முடிவினை உயர்நிலைக்குழு விளையாட்டாக எடுத்து- அதிகாரப் பசியுடன் இருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை திருப்திப்படுத்த நினைக்க கூடாது.

• அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் அரசியல் சட்டத்தை நமது அரசியல்சட்டத்தை உருவாக்கியவர்கள் சிந்தித்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அரசியல் சட்டத்தை சிதைக்கவோ- உருமாற்றவோ, விரைவில் மக்களால் நிராகரிக்கப்படும் பாராளுமன்ற மெஜாரிட்டி உள்ளோரின் சுயநலத்திற்கு உயர்நிலைக்குழு துணை போக கூடாது.

இறுதியாக, மேற்குறிப்பிட்ட அனைத்து காரணங்களினால் பாராளுமன்றம், சட்டமன்றம், நகராட்சிகள், பஞ்சாயத்து ஆகியவற்றிற்கு "ஒரே நாடு, ஒரே தேர்தல்" என்ற நடைமுறையை மிக கடுமையாக எதிர்க்கிறது. ஆகவே உயர்நிலைக்குழு இது தொடர்பான தனது விசாரணையை நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் - இல்லையென்றால் திராவிட முன்னேற்றக் கழகம் சட்டத்தின் வழி கொண்டு பொருத்தமான நடவடிக்கையை எடுக்க தள்ளப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
ஜனவரி 17, 2023

# குஜராத் உச்சி மாநாடு திட்டங்கள், கண்டுபிடிப்புகள் மற்றும் முதலீடுகள் மூலம் நாட்டை வலுப்படுத்தியுள்ளது - அமித் ஷா



சென்னை, 17 ஜனவரி 2024: மத்திய உள்துறை மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் அமித் ஷா குஜராத்தில் நடந்த 'அதிர்வுமிக்க குஜராத் உச்சிமாநாட்டின்' நிறைவு விழாவில் உரையாற்றினார். இந்தச் சந்தர்ப்பத்தில், 'யோசனைகள், கண்டுபிடிப்புகள் மற்றும் முதலீடுகள் மூலம், 'அதிர்வுமிக்க குஜராத் உச்சி மாநாடு' குஜராத் மற்றும் ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதாரத்தையும் வலுப்படுத்தியுள்ளது' என்று ஷா தெளிவுபடுத்தினார்.

பிரதமர் நரேந்திர மோடி இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் 'அதிர்வுமிக்க குஜராத்' என்று கற்பனை செய்தார், அதன் விளைவை இன்று காணலாம். பல விஷயங்களில் தரமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இன்றைய நிறைவு அமர்வு அமிர்த காலில் தீர்மானத்திலிருந்து சாதனைக்கு வழி வகுத்தது. தன்னம்பிக்கை மற்றும் முழு வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் 'அதிர்வுமிக்க குஜராத் உச்சிமாநாட்டின்' பங்கு முக்கியமானது என்பதை நிரூபிக்கப் போகிறது.

பல தசாப்தங்களாக, மோடி-ஷா ஜோடி குஜராத் மாதிரியை உருவாக்க உழைத்தனர், அதன் காரணமாக குடிமக்கள் தேசத்தை மோடியிடம் ஒப்படைத்தனர். பிரதமர் நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் இன்று பொறுப்பில் உள்ளனர். உலகம் முழுவதிலும் உற்பத்தி மற்றும் முதலீட்டுக்கு மிகவும் பிடித்தமான இடமாக இந்தியா உள்ளது.மோடி நாட்டின் பிரதமராக பொறுப்பேற்ற போது, இந்தியாவின் பொருளாதாரம் உலக அளவில் 11வது இடத்தில் இருந்தது என்பதும், இன்று பத்தாண்டுகளுக்குள், உலகின் முதல் 5 பொருளாதார நாடுகளில் இந்தியாவும் இடம் பிடித்துள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மை. வரும் காலங்களில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மாற உள்ளது.

பிரதமரின் தலைமை மற்றும் அமித் ஷாவின் வழிகாட்டுதலின் கீழ், 'வைப்ரண்ட் குஜராத் உச்சிமாநாடு', யோசனைகள் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு ஒரு தளத்தை வழங்குவதன் மூலம் முதலீட்டைக் கொண்டு வர உழைத்துள்ளது, இது குஜராத் மற்றும் முழு நாட்டின் பொருளாதாரத்திற்கும் பயனளிக்கிறது. இதன் விளைவாக, நாட்டின் பல மாநிலங்கள் தொழில் வளர்ச்சிக்காக அதிர்வு குஜராத் மாதிரியை ஏற்றுக்கொண்டன. மண்டல்-பெச்சராஜி இன்று ஆட்டோமொபைல்களின் மிகப்பெரிய மையமாக மாறியுள்ளது. இரசாயனங்கள் மற்றும் பெட்ரோ கெமிக்கல்களை தயாரிப்பதற்கான இந்தியாவின் முதல் முதலீட்டுப் பகுதியாக தாகேஜ் மாறியுள்ளது. சூரத்தில் உள்ள பிரதமரின் மித்ரா பூங்கா, மெஹ்சானாவில் உள்ள மெகா உணவுப் பூங்கா, பருச்சில் உள்ள மொத்த மருந்துப் பூங்கா, ராஜ்கோட்டில் மருத்துவ சாதனப் பூங்கா, வதோதராவில் உயிரி தொழில்நுட்ப பூங்கா, ராஜ்கோட்டில் உள்ள வேளாண் பூங்கா மற்றும் பனஸ்கந்தாவில் உள்ள அக்ரோ பார்க் மற்றும் வல்சாத்தில் உள்ள கடல் உணவுப் பூங்கா ஆகியவை குஜராத்தில் அனைத்து முதலீட்டு வாய்ப்புகளையும் திறந்துள்ளன. மோடி குஜராத்தை கொள்கை சார்ந்த மாநிலமாக மாற்றினார், இன்று உலகம் முழுவதிலுமிருந்து முதலீட்டாளர்கள் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு குஜராத்தில் முதலீடு செய்கிறார்கள். வளர்ந்த இந்தியாவின் நுழைவாயில் குஜராத் வழியாக செல்கிறது.

மோடி-ஷா ஜோடி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தி, இந்தியாவுக்கு புதிய அடையாளத்தை வழங்கிய விதத்தில், மோடி மீண்டும் பிரதமர் பதவியை தக்கவைத்துக்கொள்வார் என்பதும், அரசியலின் சாணக்கியர் என்று அழைக்கப்படும் அமித்ஷா தொடர்ந்து இருப்பார் என்று அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

# வி ஆர் சென்னை இன் மார்கழி உற்சவம், பொங்கல் விழாக்கள் மற்றும் குடியரசு தின கொண்டாட்டங்கள் ஆகிய கலாச்சார நிகழ்வுகளின் ஒரு கண்கவர் வரிசை

சென்னை, 17 ஜனவரி 2024: வி ஆர் சென்னை ஜனவரி மாதம் முழுவதும் துடிப்பான மற்றும் கலாச்சாரம் நிறைந்த கொண்டாட்டங்களை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. 'கனெக்டிங் கம்யூனிட்டீஸ்' சமூகங்களை இணைத்தல் என்ற அதன் உறுதிப்பாட்டிற்கு ஏற்ப வி ஆர் சென்னை, பாரம்பரியம், விழாக்கள் மற்றும் தேசியப் பெருமை ஆகியவற்றின் கருப்பொருள்களை ஒன்றிணைக்கும் ஒரு கலாச்சார காட்சிப்படுத்துதலை நடத்தும்.

பண்டிகை மாதத்தின் தொடக்கத்தில், மார்கழி மாசத்தை கொண்டாடும் வகையில் வி ஆர் சென்னை பல்வேறு நிகழ்ச்சிகளின் ஒரு வரிசையை ஏற்பாடு செய்துள்ளது. இந்த மங்களகரமான காலகட்டத்தின் உணர்வில், தமிழ்நாட்டின் செழுமையான பாரம்பரியம் மற்றும் கலைத்திறனைப் போற்றும் வகையில் ஒரு பரவசமான கலாச்சார கண்கவர் காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜனவரி 13 அன்று, வி ஆர் சென்னை பிரபல கர்நாடக நடனக் கலைஞர் பிஜுவின் மெய்சிலிர்க்க வைக்கும் கிளாசிக்கல் மற்றும் செமி கிளாசிக்கல் நடன நிகழ்ச்சியையும் மற்றும் நடிகர் இனியாவின் ஒரு சிறப்பு நடன நிகழ்ச்சியையும் நடத்தும். ஜனவரி 14-ம் தேதி மேஸ்ட்ரோ ராஜேஷ் வைத்யா இன் வீணை இசையுடன் மார்கழி மாச பண்டிகைகள் நிறைவடையும்.

ஜனவரி 16 & 17 ஆகிய தேதிகளில் அறுவடை சீசனைக் கொண்டாடும் வகையில், வி ஆர் சென்னை ஒரு துடிப்பான பொங்கல் கொண்டாட்டத்தை நடத்தவுள்ளது. இந்த உற்சாகமான நிகழ்வானது, பாரம்பரிய நிகழ்ச்சிகளின் ஒரு கலவையை உள்ளடக்கிய ஒரு கலாச்சார களியாட்டத்தில் சமூகத்தை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- கரகாட்டம் ஒரு பாரம்பரிய நாட்டுப்புற கலை.
- ஒயிலாட்டம், தாள படிகள் மற்றும் சுழல்களை உள்ளடக்கிய ஒரு உயிரோட்டமான மற்றும் வண்ணமயமான நடன வடிவமாகும்.
- மயிலாட்டம், அதன் அழகான மற்றும் நுட்பமான அசைவுகளுக்கு பெயர் பெற்ற மயில் நடனம்.
- தப்பாட்டம், ஆறு நபர்களைக் கொண்ட ஒரு ஆற்றல்மிக்கக் குழுவானது, மரக் குச்சிகளைப் பயன்படுத்தி ஒரு வசீகரிக்கும் காட்சி மற்றும் செவிப்புலக்காட்சியை உருவாக்குகிறது.
- சிலம்பாட்டம், சுறுசுறுப்பு, திறமை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு பாரம்பரிய தற்காப்புக் கலை வடிவம் ; மற்றும்
- பொய்க்கால்குதிரை, நாதஸ்வர இசைக்கருவியின் மெல்லிசைகளுடன், கலைநயத்துடன் அலங்கரிக்கப்பட்ட குதிரை உருவங்களை உள்ளடக்கிய பாரம்பரிய நாட்டுப்புற நடனம்.

கொண்டாட்டங்களின் உச்சக்கட்டத்தை குறிக்கும் வகையில் குடியரசு தினமானது, ஒற்றுமை மற்றும் தேசபக்தியின் உணர்வை போற்றும் ஒரு நாளாகும். ஜனவரி 26 அன்று கிரேட்டர் சென்னை காவல்துறையால் உருவாக்கப்பட்ட அனைத்து பெண்கள் பேக்பைப் இசைக்குழுவின் ஒரு பிரத்யேக நிகழ்ச்சியை அறிவிப்பதில் வி ஆர் சென்னை பெருமிதம் கொள்கிறது. திறமையான இசைக்கலைஞர்கள் தங்கள் இசைத் திறனை வெளிப்படுத்தி விழாக்களில் தங்கள் தனித்துவமான கலைத்திறனை வழங்குவார்கள்.

வி ஆர் இல் 'சமூகங்களை இணைத்தல்' மற்றும் உள்ளூர் பாரம்பரியத்தை பிரதிபலிப்பதில் நாங்கள் நம்புகிறோம். தமிழ்நாட்டுக்கே உரிய உள்ளூர் மரபுகள் மற்றும் கலாச்சார அம்சங்களின் முக்கியத்துவத்தை பெரிதாக்கும் நிகழ்ச்சிகளை தீவிரமாக நடத்துவதில் வி ஆர் சென்னை பெருமை கொள்கிறது. மாநிலத்தின் பல்வேறு பாரம்பரியத்துடன் ஆழமான பிணைப்பை வளர்க்கும் கவர்ந்திழுக்கும் அனுபவங்களை உருவாக்குவதே எங்கள் குறிக்கோளாக இருக்கிறது.

நடந்துகொண்டிருக்கும் விழாக்களுடன், வி ஆர் சென்னை தற்போது ஜனவரி 31, 2024 வரை 'மேட் மேட் சேல்' ஐ நடத்துகிறது. இந்த மாதம் முழுவதும் சிறந்த உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச பிராண்டுகளின் ஒரு தேர்வில் இருந்து அசாதாரணமான டீல்கள், பிரத்தியேக சலுகைகள் மற்றும் 50% வரை தள்ளுபடிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அனைவருக்கும் திறந்திருக்கும் இந்த நிகழ்வுகள், குடியிருப்பாளர்களையு பார்வையாளர்களையும் ஒன்றுகூடவும், ஒற்றுமை உணர்வில் கொண்டாடவும் அழைக்கிறது. வாருங்கள், இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தின் செழுமையை ஒரு புதிய மாதத்திற்கு அனுபவியுங்கள் மற்றும் புத்தாண்டை மறக்க முடியாத அனுபவங்களுடன் நிரப்புங்கள்.

# உடல் உறுப்புக்களை தானம் செய்த பெண்ணுக்கு அரசு மரியாதை : தெருவுக்கு அவரது பெயரான 'பானுமதி அம்மாள்' சூட்டப்பட்டது



சென்னை, 17 ஜனவரி 2024: உடல் உறுப்புக்களை தானம் செய்திருக்கும் சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் ஓய்வு பெற்ற கண்காணிப்பாளர் கற்பகாம்பாள் எனப்படும் பானுமதியின் மறைவுக்கு தமிழக அரசு சார்பில் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

மேலும் அவர் குடியிருந்து வந்த அயப்பாக்கம் ஊராட்சியில் தெருவின் பெயருக்கு 'பானுமதி அம்மாள்' என்று பெயர் சூட்டப்பட்டு, பெயர்ப்பலகை வைக்கப்பட்டது.

மாநகர போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் பானுமதி. வயது 68. 'திடீர்' உடல் நலக்குறைவால் மரணமடைந்தார். போக்குவரத்துக் கழகத்தில் டெலிபோன் ஆப்பரேட்டராக வேலைக்குச் சேர்ந்தவர், 2014ம் ஆண்டில் ஓய்வு பெற்றார். கணவர் விஜயகுமார். 3 மகன்கள் (வி.பாலசுப்பிரமணியம், சரவணன், வினோத்குமார்), ஒரு பேரன், 2 பேத்திகள். சவிகரண்.

உடல் நலம் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர், சிகிச்சை பலனளிக்காமல் மரணமடைந்தார். பானுமதி அம்மாளின் இருதயம், நுரையீரல், ஈரல், கண்கள் ஆகிய உடல் உறுப்புக்களை குடும்பத்தார் தானம் செய்தனர்.

இந்நிலையில் திருவள்ளூர் துணை கலெக்டர் நேரில் வந்து, பானுமதி அம்மாள் உடல் மீது மாலை வைத்து அரசு சார்பில் மரியாதை செலுத்தினார். பின் உடல் தகனம் செய்யப்பட்டது.

பானுமதி வாழ்ந்த தெருவுக்கு 'பானுமதி அம்மாள் தெரு' என, பெயரிட ஊராட்சி மன்றம் சார்பில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பெயர்ப்பலகை வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, அயப்பாக்கம் ஊராட்சி தலைவர் வீரமணி கூறுகையில், ''பொது மக்கள் பிரச்சனைகளில், பானுமதி அம்மாள் தாமாக முன் வந்து குரல் கொடுத்து வந்தார். அவரது நினைவாக, அவர் வாழ்ந்த தெருவுக்கு அவர் பெயர் வைக்க சிறப்பு தீர்மானம் நிறைவேற்றி உள்ளோம். இம்மாதம் 26ந் தேதி நடக்கும் கிராம சபை கூட்டத்தில், அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்த உள்ளோம்' என்றார்.

அரசு சார்பில் இறுதி மரியாதை, அவர் வசித்த தெருவுக்கு அவரது பெயர் வைத்திருப்பது குறித்து குடும்பத்தினர் நெகிழ்ச்சி அடைந்து அரசுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிப்பதாக சகோதரி பவானி ராம்கோபால் தெரிவித்தார்.

இருக்கும்போது சமூக ஆர்வலராக சமூகப்பணியைத் தொடர்ந்தவர், மரணத்துக்குப் பிறகு 4 பேருக்கு வாழ்க்கை அளித்திருப்பதில் குடும்பம் நெகிழ்ச்சியுடன் பெருமை கொள்வதாகவும் அவர் கண்கலங்கியபடி தெரிவித்தார்.

# முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் பாதுகாப்பான என் சி டி களின் பொது வெளியீடு மூலம் ரூ.300 கோடி வரை திரட்ட உள்ளது



சென்னை, 17 ஜனவரி 2024: 136 ஆண்டுகள் பழமையான முத்தூட் பாப்பச்சன் குழுமத்தின் (முத்தூட் புளூ) முதன்மை நிறுவனமான முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் ("கம்பெனி"), ரூ.1,100 கோடி வரம்பிற்குள் இருக்கும் மொத்தம் ரூ.300 கோடிகள் வரை ஒரு தொகையை திரட்டுவதற்கு, பாதுகாப்பான, மீட்டெடுக்கக்கூடிய, மாற்ற முடியாத கடன் பத்திரங்களின் ("என் சி டிஃ") XVI ட்ரான்ச் III தொடரை அறிவித்துள்ளது. இந்த மூன்றாவது தவணை வெளியீட்டுத் தொகை, ஒரு கிரீன் ஷூ விருப்பமான ரூ.225 கோடி உடன் ரூ.75 கோடி, மொத்தமாக ரூ.300 கோடி ("ட்ரான்ச் மிமிமி வெளியீடு"). ஒவ்வொரு என் சி டிக்கும் ரூ.1000 முகமதிப்பு கொண்ட இந்த ட்ரான்ச் மிமிமி வெளியீடு, செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்ட் ஆஃப் இந்தியா (மாற்ற முடியாத பத்திரங்களின் வெளியீடு மற்றும் பட்டியலிடுதல்) ஒழுங்குமுறைகள், 2021 இன் விதிமுறை 33A இன் படி, மற்றும் முன்கூட்டியே மூடுவதற்கு உட்பட்டு, எங்கள் இயக்குநர்கள் குழு அல்லது நிறுவனத்தின் முறையாக அமைக்கப்பட்ட குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, தொடர்புடைய ஒப்புதல்களுக்கு உட்பட்டு ஜனவரி 12, 2024 வெள்ளிக்கிழமை முதல் ஜனவரி 25, 2024 வியாழன் வரை பொது மக்களுக்குத் திறந்திருக்கும்.

24 மாதங்கள், 36 மாதங்கள், 60 மாதங்கள் மற்றும் 96 மாதங்களுக்கான முதிர்வு/காலவரையறை விருப்பங்களுடன், I, II, III, IV, V, VI VII, VIII, IX மற்றும் X ஆகியவற்றிலிருந்து வாடிக்கையாளர்கள் வசதியாக தேர்வு செய்யக்கூடிய விருப்பங்கள் முழுவதிலும் மாதாந்திர, வருடாந்திர மற்றும் ஒட்டுமொத்த செலுத்துதல் விருப்பங்களுடன் ட்ரான்ச் மிமிமி வெளியீட்டின் கீழ் இந்த என் சி டிகள் வழங்கப்படுகின்றன. விருப்பம் X 50 கோடி வரை கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், அனைத்து வகை முதலீட்டாளர்களிலும் என் சி டி வைத்திருப்பவர்களுக்கு பயனுள்ள வருவாய் (ஆண்டுக்கு) 9.26 % முதல் 9.75 % வரை இருக்கும். ட்ரான்ச் III இன் கீழ் வழங்கப்பட்ட இந்த பாதுகாக்கப்பட்ட என் சி டிகள், கிரிசில் ஆல் எ எ -/ஸ்டேபிள் என மதிப்பிடப்பட்டு, பி எஸ் ஈ-ன் கடன் சந்தைப் பிரிவில் பட்டியலிட முன்மொழியப்பட்டுள்ளது.

"நாங்கள் வழங்கும் XVI தொடரின் என் சி டிகளில் இது மூன்றாவது ஆக இருப்பதால் எங்களின் தற்போதைய மற்றும் வருங்கால வாடிக்கையாளர்கள் இந்தியா முழுவதும் உள்ள எங்களின் 3600க்கும் மேற்பட்ட கிளைகளில் ஏதேனும் ஒன்றைப் பார்வையிடலாம் அல்லது என் சி டி களில் முதலீடு செய்ய எங்கள் மொபைல் செயலியான முத்தூட் ஃபின்கார்ப் ஒன்-ல் உள்நுழையலாம். கிரிசில் மதிப்பீட்டில் எ எ -/ஸ்டேபிள் மதிப்பீடு மூலம் இந்த வெளியீட்டிற்கு நல்ல விளைவை நாங்கள் எதிர்பார்க்கிறோம், மேலும் எதிர்கால கடன் வழங்கும் நடவடிக்கைகளுக்கு இந்த திரட்டலைப் பயன்படுத்த திட்டமித்துள்ளோம் " என்று முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் இன் தலைமை நிர்வாக அதிகாரி ஷாஜி வர்கீஸ் கூறினார்.